**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 147** **நாள் : 27.06.2025**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 21 நீர்வழிக்கால்வாய்களில் ரூ.211.86 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்தும், உயர்த்தியும், வலையுடன் கூடிய சங்கிலி வேலி அமைத்தும் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பருவமழைக் காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களின் ஆலோசனையின்படியும், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்களின் அறிவுரையின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டு, அந்த இடங்களில் புதியதாக மழைநீர் வடிகால்கள் மற்றும் இணைப்புக் கால்வாய்கள் அமைத்தல், நீர்நிலைகள் புனரமைத்தல், மழைநீர் வடிகால்களில் வண்டல் மண் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மழைநீர் தேக்கத்தை தவிர்த்து மழைநீரினை சேகரிக்கும் வகையிலும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடும் வகையிலும், மேலும் புதிய குளங்கள் உருவாக்குதல், நீர்நிலைகளை புனரமைத்து மேம்படுத்துதல், மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி 3,041 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் அமைத்து பராமரித்து வருகிறது. மேலும், 81 கி.மீ. நீளத்திற்கு 44 நீர்வழிக்கால்வாய்களைப் பராமரித்து வருகிறது.

மழைநீர் வடிகால்களிலிருந்து மழைநீரானது நீர்வழிக்கால்வாய்களில் சென்று, ஆற்றில் கலந்து கடற்கரையில் சென்றடைகிறது. பருவமழைக்காலங்களில் இந்த 44 நீர்வழிக்கால்வாய்களில் மழைநீர் சீராகச் செல்லும் வகையில், ஆம்பிபியன், மினி ஆம்பிபியன், ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் சுழற்சி முறையில் தூர்வாரும் பணி மற்றும் மிதக்கும் கழிவுகளை அகற்றும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட டிரஸ்ட்புரம் நீர்வழிக்கால்வாயில் ரூ.16.86 கோடி மதிப்பீட்டில் வெள்ளத்தடுப்புச் சுவர் அமைத்தல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவடையும்போது சூளைமேடு பகுதியில் மழைநீர்தேங்குவது தவிர்க்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்த நீர்வழிக்கால்வாய்கள் உள்ள பகுதிகளில் மழைநீர் தேக்கத்தைத் தவிர்க்கும் வகையில், கொடுங்கையூர் பிரதான கால்வாய், வியாசர்பாடி கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், லிங்க் கால்வாய், கண்ணப்பர் திடல் திறந்தவெளி கால்வாய், பவுடர்மில்ஸ் சாலையில் உள்ள காந்தி கால்வாய், இரயில்வே ஆன்ஸ்லே கால்வாய், அம்பத்தூர் சிட்கோ கால்வாய், கீழ்ப்பாக்கம் கார்டன் முதல் ஓட்டேரி நல்லா கால்வாய் வரையிலான கால்வாய், மாம்பலம் கால்வாய், நந்தனம் கால்வாய், எம்.ஜி.ஆர். கால்வாய், ஜாபர்கான்பேட்டை கால்வாய், வீராங்கல் ஓடை, அடையாறு மண்டலத்தில் உள்ள சிட்கோ கால்வாய், ரெட்டிகுப்பம் கால்வாய், செல்லம்மாள் கால்வாய், ஜவஹர் கால்வாய் (எம்.எச். சாலை முதல் சின்னக்குழந்தை, 2ஆவது லேன் வரை) ஆகிய 18 நீர்வழிக்கால்வாய்களில் தற்போது உள்ள வெள்ளத் தடுப்புச்சுவரினை (Flood Protection Retaining wall) உயர்த்தியும், வெள்ளத் தடுப்புச்சுவர் இல்லாத இடங்களில் வெள்ளத் தடுப்புச்சுவர் அமைத்தும், கால்வாய்களில் குப்பைகள் போடுவதைத் தவிர்க்கும் வகையில் தடுப்புச்சுவரின் மேல் 1.50 மீட்டர் உயரத்திற்கு சங்கிலி இணைப்பு வேலியுடன் கூடிய (Chain Link Fencing) வலையும் அமைக்கப்படவுள்ளது. மேலும், தடுப்புச்சுவர் இல்லாத இடங்களில் புதிதாக வெள்ளப் பாதுகாப்பு தடுப்புச்சுவர் (Flood Protecting Retaining Wall) அமைத்து, அதன் மேல் சங்கிலி இணைப்பு வேலி (Chain Link Fencing) உள்ளிட்ட பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், ரூ.99.92 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் வரும் பருவமழைக்கு முன்னர் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், பராமரிப்புப் பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய் ஆகிய 2 கால்வாய்களில் பருவமழைக்காலங்களில் மழைநீர் தங்குதடையின்றி விரைந்து செல்ல ஏதுவாக தூர்வாருதல், ஜெர்மன் வங்கி மற்றும் மூலதன நிதியின் கீழ், ரூ.95 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புச்சுவர் உயரத்தி அமைத்தல் மற்றும் சங்கிலிவேலி அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 07.07.2025 அன்று ஒப்பம் திறக்கப்படவுள்ளது.

மொத்தம் ரூ.211.86 கோடி மதிப்பீட்டில் 21 நீர்வழிக் கால்வாய்களில் வெள்ளத்தடுப்புச் சுவர் உயர்த்தி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பருவமழைக் காலங்களில் இந்த நீர்வழிக்கால்வாய்களில் மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டு, அதன் காரணமாக வெள்ளப் பாதிப்புகள் வெகுவாக குறைந்து பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**